# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, THENI.

**M.C.O.P.No. 131/2023 c/w 148/2023**

Deposition of Witness : RW1 - (2 எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | அரியநாச்சி | Father's Name | : | |
| Village | : | | Taluk | : | |
| Caste | : | | Calling | : | |
| Religion | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act No.44 of 1969 of the day of 27-01-2025

**சாட்சி இன்று அழைக்கப்பட்டு திருமதி. வனிதா, கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் அவர்களால் உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

<u>முதல் விசாரணை</u>– தொடங்கப்பட்ட நேரம் : 11.45 மு.ப.

நான் தேனி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணியாற்றி வருகிறேன். இவ்வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு தேனி வட்டார போக்குவரத்து அலுவலருக்கு வரப்பெற்ற அழைப்பாணையின்படி, தேனி வட்டார போக்குவரத்து அலுவலர் சார்பாக சாட்சியம் அளிப்பதற்கு எனக்கு உரிய அதிகார கடிதம் கொடுக்கப்பட்டுள்ளது. அந்த அதிகார கடிதம் **எ.ம.சாஆ–1.** தேனி தாலுகா அல்லிநகரம் மச்சால் மெயின்தெரு கதவு எண்.84B/2 ல் வசிக்கும் மாரிஸ்வரன் குமாரர் விஷால் என்பவருக்கு கடந்த 11.03.2023 ம் தேதியில் ஹியருடன் கூடிய மோட்டார் சைக்கிளை பொதுச்சாலையில் ஓட்டுவதற்கு செல்லத்தக்க ஓட்டுநர் உரிமம் இல்லை., மேலும் தேனி தாலுகா அல்லிநகரம் கிணற்று தெரு க.எண்.22A ல் குடியிருக்கும் ஆறுமுகம் குமாரர் ஹரிஹரன் என்பவருக்கும் கடந்த 11.03.2023 ம் தேதியில் பொதுச்சாலையில் ஹியருடன் கூடிய மோட்டார் சைக்கிளை பொதுச்சாலையில் ஓட்டுவதற்கு செல்லத்தக்க ஓட்டுநர் உரிமம் உள்ளது என்பது குறித்தும் வட்டார போக்குவரத்து அலுவலர் வழங்கிய கடிதம் **எ.ம.சாஆ–2 ஆகும்.** விபத்தில் ஈடுபட்ட TN 60 K 9454 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தில் ஒரே சமயத்தில் ஓட்டுநரையம ்சேர்த்து எத்தனை நபர்கள் பயணம் செய்யலாம் என்றால் 2 நபர்கள் பயணம் செய்யலாம். விபத்தில் ஈடுபட்ட ஹரிஹரன்

என்பவரின் ஓட்டுநர் உரிமம் Extract **எ.ம.சாஆ–3** ஆகும்.

மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:–

விஷால் என்பவருக்கு எங்கள் அலுவலகதம் தவிர வேறு அலுவலகத்திலா் ஓட்டுநர் உரிமம் பெற்றிருந்து அதை பரிசோதிக்க என்னென்ன விபரங்கள் வேண்டும்என்றால்அரது பெயர், மற்றும் பிறந்த தேதி மற்றும் ஓட்டுநர் உரிமம் எண் இருந்தால் மட்டுமே கண்டுபிடிக்க முடியும். எனக்கு கொடுக்கப்பட்ட வேண்டுகோள் கடிதத்தில் மேற்கண்ட விபரங்கள் இல்லை என்று சொன்னால் சரிதான். வேறு அலுவலத்தில் ஓட்டுநர் உரிம் பெற்றிருந்தாரா இல்லை என்பது பற்றி என்னால் உறுதியிட்டு கூறமுடியாது என்று சொன்னால் சரிதான்.

விசாரணை முடிக்கப்பட்ட நேரம் : 11.59 மு.ப.

*Taken down by me/before me in open Court interpreted read over to the witness and admitted by the deponent to be correct.*

Digitally signed by G N SARAVANAKUMAR
Date: 2025.01.27 18:40:55 +0530

Chief Judicial Magistrate,
Theni
Date: 27-01-2025